Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
|---|---|

வேணு : 15 ஆகஸ்டு 2009 கானம் : 1

## ஸ்ரீமாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு பதினாறாவது ப்ரும்மோத்ஸவம்

### நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| 13-08-2009 | வியாழன் | இரவு | ஹம்ஸ வாஹனம், நந்தோத்ஸவம் |
| 14-08-2009 | வெள்ளி | மாலை | சேஷ வாஹனம் |
| 15-08-2009 | சனி | மாலை | சிம்ம வாஹனம் |
| 16-08-2009 | ஞாயிறு<br>ஏகாதசி | காலை<br>மாலை | விசேஷ திருமஞ்சனம்<br>கருட சேவை |
| 17-08-2009 | திங்கள்<br>த்வாதசி | காலை<br>மாலை | கோவிந்த பட்டாபிஷேகம்<br>யானை வாஹனம் |
| 18-08-2009 | செவ்வாய் | மாலை | புன்னை மர வாஹனம் |
| 19-08-2009 | புதன் | மாலை | நிகுஞ்சோத்ஸவம் |
| 20-08-2009 | வியாழன் | காலை<br>மாலை | குதிரை வாஹனம்<br>ஜானவாசம்–நாதஸ்வரம்–கடலூர் ஸ்ரீபாலச்சந்தர் & ஸ்ரீபாலமுருகன் குழுவினர் |
| 21-08-2009 | வெள்ளி | காலை<br>மாலை<br>இரவு | ராதாகல்யாணம்<br>காமதேனு வாஹனம்<br>தெப்போத்ஸவம் |
| 22-08-2009 | சனி | காலை<br>மாலை | ரதோத்ஸவம்<br>விடையாற்றி |

இடம்: மதுரபுரி ஆஸ்ரமம்

அனைவரும் வந்து குருக்ருபைக்கும் பகவத் க்ருபைக்கும் பாத்திரமாகும்படி கேட்டு கொள்கிறோம்

இப்படிக்கு
மஹாரண்யம் ஸ்ரீமுரளீதரஸ்வாமிஜி

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
Email:contact@namadwaar.org

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 15 ஆகஸ்டு 2009 கானம் : 1



ஜூலை 19, விட்டலாபுரம் - ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்கள் விஜயம்



குரு பூர்ணிமா, Divine Life Society மதுரை தலைவர் ஸ்ரீசிவானந்த சுந்தரானந்தா மாலை சிறப்பு உரை - மதுரபுரி ஆஸ்ரமம்- ஜூலை 7



பெரியகுளத்தில் GOD India Trust சார்பாக புதிய நாமத்வார் துவக்கம் - ஜூலை 5




வேத மந்திர ஒலித்தட்டு வெளியீடு ராகசுதா ஹால், மயிலாப்பூர்- ஜூலை 5



ஆசிரியர் பயிற்சி முகாம் - முடிச்சூர் விவேகானந்தா பள்ளி - ஜூலை 4





பகவான் யோகிராம்சுரத்குமார் பக்தர்கள் நாமகீர்த்தனம், மதுரபுரி ஆஸ்ரமம்- ஜூன் 23




நங்கநல்லூர்- விட்டல் பஜன் சமாஜ் - அபங்க பஜன் மேளா - ஜூலை 16




கந்தசரச மஹால் - தஞ்சாவூர் - மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை- ஜூலை 24





ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:15 ஆகஸ்டு 2009 கானம்:1


- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.


உள்ளே ...


| | |
|---|---|
| ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 03 |
| மதுரமான மஹநீயர் - 161 | 04 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் | 06 |
| பாகவத பழம் -13 | 08 |
| ஆன்மீக சாதகர்களுக்கு | 13 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 25 |
| ப்ரம்மம் ஏகம் கீதைகள் அநேகம் -6 | 27 |
| ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 29 |
| மாலே மணிவண்ணா - 74 | 32 |
| அக்ஷரமணமாலை -159 | 35 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

## NOBODY CAN SHAKE INDIA

-- BHAGAWAN YOGIRAMSURATKUMAR

ஸ்ரீ ஹரி:

நாமஸங்கீர்த்தனமே நமது வழிபாடு. சாதியினாலோ, மதத்தினாலோ, தேசத்தாலோ, மொழியினாலோ ஏற்பட்ட வேற்றுமைகளை மறந்து நாம் யாவரும் அன்புடன் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

ஒரு சமூகத்தை ஒரு சமூகம் தாக்கக்கூடாது. மனிதாபிமானம் வேண்டும். நம்மை பிறர் அடித்தால், துன்புறுத்தினால், நமக்கு எப்படி இருக்கும்? நாம் பிறரை துன்புறுத்தலாகாது. கடவுளுக்கு சம்மதமாய் வாழ வேண்டும்.

எந்நாட்டிலும், எம்மக்களுக்கும், எம்மதத்தவர்களுக்கும், ஒரே கடவுள்தான். அவருடைய மக்களே நாம். ஸ்ரீக்ருஷ்ண சைதன்யர், ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீமஹாத்மா காந்தி இம்மூவரும் இநதக் கொள்கையைத்தான் பிரச்சாரம் செய்தனர்.

எம்மதமும் சம்மதமே! எந்த நாடும் நம்நாடே! எந்த மக்களும் நம்மக்களே! என்ற சமதர்மம் வேண்டும். எல்லோரும் சேர்ந்து ஹரி நாமம் சொல்லுவோம்!

– ஸ்ரீ ஸத்குருநாதர்

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: ஸாவேரி

தாளம்: ஆதி



பல்லவி

கதம் மம லப்யம் தவ விரஹம்

அனுபல்லவி

பவ ப்ரம்மாதி ஸுரகணதுர்லபம்
நிரஸ்த ஸாம்யாதிஶய விசேஷம்

(கதம்..)

சரணம்

தவ விரஹம் வினா தர்ஶனம் துர்லபம்
தவ தர்ஶனம் வினா ஜன்மம் வ்யர்த்தம்
த்வமேவ மம ப்ராணாதார:
த்வரயா குரு விரஹகடாக்ஷம்

(கதம்..)

**வேதே ராமாயணே புண்யே பாரதே பரதர்ஷப**
**ஆதௌ ச அந்தே ச மத்யே ச ஹரி: சர்வத்ர கீயதே**

**"புண்யமான வேதத்திலும் ராமாயணத்திலும், மஹாபாரதத்திலும் ஆதி-நடு-முடிவு மற்றும் எல்லாவிடங்களிலும் விஷ்ணுவானவர் கானம் செய்யப்படுகிறார்."**

(மஹாபாரதம்- பாகவத ஸ்ரவண விதி அத்யாயம்)

# மதுரமான மஹனீயர் – 161

(Dr. ஆ.பாக்யநாதன்)




கணிதம் என்று ஒரு பாடம். அந்த கணிதத்தை இன்று உலகில் சிறு வகுப்பிலிருந்து ஆரம்பித்து Ph.D வரை எவ்வளவு பேர் படிப்பார்கள். கோடிக்கணக்கில் படிப்பார்கள் அப்படித்தானே! அப்படி அவர்கள் படிக்கும் பாடம் என்ன? அந்த கணிதத்துறையில் பல ஆராய்ச்சிகள் செய்து புதிய புதிய Theorem, Formula போன்றவைகளை கண்டுபிடித்தவர்களுடைய கண்டுபிடிப்புகள்தான் அல்லவா? பித்தாகரஸ், ஆர்க்கிமெடிஸ் போன்ற கணித மேதைகளுடைய கண்டுபிடிப்புகள் .


இந்த கணித பாடத்தை படிப்பவர்கள் எதற்காக படிக்கின்றார்கள்? பலருக்கு இந்த கணக்கு பாடம் புரியவே இல்லை என்றாலும் கூட படிக்கின்றார்கள்.சிலர் வெறுத்துக்கொண்டே படிக்கின்றார்கள். சிலர் கடமையே என்று படிக்கின்றார்கள்.சிலர் படித்தால் வருமானம் வரும், வேலை கிடைக்கும் என்று படிக்கின்றார்கள். அவர்களுக்கு இது வயிற்றுப்பிழைப்புக்கு ஒரு வழி. சிலருக்கு படிக்க வேண்டும் என்பது ஒரு சமூக வழக்கம்; அதற்காக படிக்கின்றார்கள். மற்றும் சிலரோ பிறருக்கு கற்பிக்க வேண்டும் என்ற ஆசையில் படிக்கின்றார்கள். இப்படி உலகம் முழுவதும் இருக்க, ஓரிருவர்தான் இதை அறிவு பூர்வமாக சிந்தித்து, மேலும் ஆராய்ச்சிகள் செய்து, மேலும் பல அரிய கண்டுபிடிப்புகளை கொடுக்கின்றார்கள்.

இது போல்தான் ஆன்மீகமும். சிலருக்கு, பல ஆன்மீக

விஷயங்களை ஏன் அவர்கள் செய்கின்றார்கள் என்றே தெரியாது. பழக்கத்தில் உள்ள ஒரு விஷயத்தை அவர்களும் கேள்வி கேட்காமல், அப்படியே பின்பற்றுகின்றார்கள். சிலருக்கு இது கடமை, மற்றும் சிலருக்கு இது சமூக அந்தஸ்து, வேறு சிலருக்கு இது வயிற்று பிழைப்பு. இப்படி கோடானு கோடி மக்கள் இருக்க, யாரோ ஓரிருவர்தான் அதன் உண்மை பொருளை விசாரித்து அனுபவத்தில் உணர்கின்றார்கள். இப்படி உண்மையை உணர்ந்த மஹான்கள் ஒரு தலைமுறைக்கு ஓரிருவர் வருவதே துர்லபம். ஆழ்ந்த சிந்தனைக்குரிய இந்த விஷயத்தை குருபூர்ணிமா (7/7/09) அன்று ஸ்ரீஸ்வாமிஜி பகிர்ந்து கொண்டார்கள்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்



***கேள்வி: குரு பௌர்ணமியின் விசேஷம் என்ன?***

பதில்: விராட்புருஷனின் மனதாக சந்திரன் கூறப்பட்டுள்ளது. பௌர்ணமி அன்று நிலவு பூர்ணமாக உள்ளதால், மனது நிறைந்து உள்ளது என்றும் கூறலாம். ஆடிமாதம் தக்ஷிணாயனத்தின் ஆரம்பம். அதாவது தேவலோகத்தின் இரவுப்பொழுது ஆரம்பம். இந்த ஆடிமாத பௌர்ணமிதான் குரு பௌர்ணமியாக கொண்டாடப்படுகிறது. குரு கிருபையால்தான் ஒருவன் மனதில் உள்ள மூன்று விதமான தாபங்களும் நாசமாகும். அதுவேதான், குரு பூர்ணிமையில், குருவானவர் விசேஷமாக கொண்டாடப்படுவதற்கும் ஒரு காரணம்.



***கேள்வி: பகவத்தரிசனம் எப்பொழுது ஏற்படும்?***

பதில்: நம்முடைய உடலில் உள்ள மயிர்க்கால்கள் ஒவ்வொன்றிலும் பகவானை அடைய வேண்டும் என்ற தீவிரமான தவிப்பு எப்பொழுது ஏற்படுகின்றதோ, அப்பொழுதுதான் பகவத்தரிசனம் ஏற்படும்.

***கேள்வி: குருவை அடைந்தால்தான் சாந்தி கிடைக்கும் என்கின்றார்கள். எனக்கு குருவை அடைந்தும் சாந்தி கிடைக்கவில்லையே?***

*உன்னுடைய அல்ப மனது அவருடைய மஹாமனதில் கலந்து விட வேண்டும். அதனால்தான் சாந்தி ஏற்படும்.*

பதில்: குருவை அடைதல்



என்றால் என்ன என்பதை, நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். மனதில் 'நான்' என்ற எண்ணத்தை விட்டு விட்டு, அவருடைய கையில் ஒரு கருவி போல் ஆக வேண்டும். நாம் செய்யும் நல்ல காரியங்களில் அகம்பாவம் ஏற்படாமல், எல்லாம் அவருடைய கிருபையாலேயே நடக்கின்றது என்ற திடசித்தம் வேண்டும். உன்னுடைய அல்ப மனது அவருடைய மஹாமனதில் கலந்து விட வேண்டும். அதனால்தான் சாந்தி ஏற்படும்.

SRI HARI:

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Zaah TECHNOLOGIES

OUR SOLUTIONS

- SEARCH ENGINE OPTIMIZATION
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- WEB DEVELOPMENT

**M/s. Zaah Technologies India Pvt. Ltd.,**
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome,
Chennai 600 004
Phone: +91-44-43033313

**E-mail:** contact@zaahindia.com

## பாகவத பழம் 13

– ஸ்ரீஸ்வாமிஜி

உத்தவர் கூறியதைக் கேட்ட பகவான் சிந்திக்கலானான். “பக்தர்கள் பிடித்துக் கொள்ள நாம் என்ன கொடுக்கலாம்?” என்று யோசித்த பகவான் ஒரு மின்னல் போல் மறைந்து, தனது தேஜஸ் முழுவதையும் ஸ்ரீமத்பாகவதத்தில் புகுத்திவிட்டான்.

*திரோதாய ப்ரவிஷ்டோயம் ஸ்ரீமத்பாகவதார்ணவம்* (மா. 3-61)

பகவான் சரீர தியாகத்தை எவ்வாறு செய்யப்போகின்றான்? என்று அங்கு ஆவலுடன் குழுமியிருந்த தேவர்கள், இதைக் கண்டு பரம ஆச்சரியம் அடைந்தனர்.

ஸ்ரீமத்பாகவதத்தை சிரவணம் செய்ததால், பக்தி, ஞான-வைராக்யம் மூவரும் புஷ்டி அடைந்ததைக் கண்ட அந்தச் சபையில் கூடியிருந்தோர்களுக்கு, சனத் குமாரர்கள், விரிவாகவும் தெளிவாகவும் அதன் பெருமைகளை மேலும் எடுத்துரைத்தார்கள்.

> இந்த யுகத்தில் வரும் மனிதர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அசக்தர்களே. அவர்களுக்கு இதைச் செய்! அதைச் செய் என்று சொல்லாமல், கேள்! போதும்! என்று சொல்ல ஒன்று வேண்டும். உடலில் உள்ள இந்திரியங்களில் காதுகளின் வழியாகக் கேட்பது மட்டும்தான் சுலபமானது. அதை விடச் சுலபமானது எதுவும் இல்லை! பகவானுக்கு எவ்வளவு கருணை இருந்தால் அப்படி ஒரு உபாயமான பாகவதத்தை நமக்கு அருளியிருப்பான்!

“இந்த சுக-சாஸ்திரத்தின் மஹிமையை என்னவென்று எடுத்துரைப்பது! இதைக் கேட்பதனால் மட்டுமே முக்தி உள்ளங்கைக் கனி ஆகிவிடுகிறதன்றோ! இந்த ஸ்ரீமத்பாகவதத்தை எப்பொழுதும் படித்து வர வேண்டும்.

இதனாலேயே ஹரி நம் உள்ளத்தில் குடி புகுந்துவிடுவான். ஸ்ரீமத்பாகவதத்தைக் கேட்காத வரையில் தான் மனிதன் இந்த அறியாமையால் ஏற்பட்ட சம்சார சக்கரத்தில் உழல்கிறான். பற்பல சாஸ்த்திரங்களைக் கற்பதாலும் கேட்பதாலும்தான் என்ன பயன்? பாகவதத்தினால் மட்டுமே முக்தியை அளிக்க முடியும். பாகவதக் கதை, ஏன் ஸ்ரீமத்பாகவத கிரந்தம் கூட எந்த இல்லத்தில் இருக்குமோ, அவ்விடமே தீர்த்தமாகி அங்கு வசிப்பவர்களின் பாவத்தைப் போக்கடித்துவிடுகின்றது. ஆயிரம் அஸ்வமேத யாகங்களோ, நூறு வாஜபேய யாகங்களோ பாகவதக் கதையின் பதினாறில் ஒரு பங்கு கூட ஆகாது.

ஸ்ரீமத்பாகவதக் கதையைக் கேட்டபின், பாவங்கள் இந்த சரீரத்தில் இருக்க முடியாது. காசி, கங்கை, பிரயாகம், புஷ்கரம், கயை போன்ற தீர்த்தங்களுக்கோ, திருத்தலங்களுக்கோ செல்வதன் பலனையும், ஸ்ரீமத்பாகவதத்தின் சிரவண பலனையும் ஒருக்காலும் சமமாகப் பேச முடியாது.

ஸ்ரீமத்பாகவதக் கதையைக் கேட்டபின், பாவங்கள் இந்த சரீரத்தில் இருக்க முடியாது. காசி, கங்கை, பிரயாகம், புஷ்கரம், கயை போன்ற தீர்த்தங்களுக்கோ, திருத்தலங்களுக்கோ செல்வதன் பலனையும், ஸ்ரீமத்பாகவதத்தின் சிரவண பலனையும் ஒருக்காலும் சமமாகப் பேச முடியாது. மிக உயர்ந்த கதியான அந்த முக்தியை அடைய விரும்பினால், ஸ்ரீமத்பாகவதத்தின் ஒரு ஸ்லோகத்தையோ, அல்லது அரை ஸ்லோகத்தையாவது தினமும் படித்தால் போதும். முக்தி வெகு சுலபம்!

*ஸ்லோகார்த்தம் ஸ்லோகபாதம் வா நித்யம் பாகவதோத்பவம்*
*படஸ்வ ஸ்வமுகேனைவ யதீச்சஸி பராம் கதிம்* (மா: 3-33)

ஸ்ரீமத்பாகவதத்தின் அர்த்தம் புரிந்து படிப்பவனின் கோடி ஜன்ம பாவங்களும் அழிந்து விடுகின்றன என்பதில் சிறு

ஐயப்பாடும் இல்லை.

அந்திமக்காலத்தில் யாருடைய உயிர், சுகர் கூறிய இந்த சாஸ்திரத்தைக் கேட்டுக் கொண்டே பிரிகின்றதோ, அவனுக்குக் கோவிந்தன் வைகுண்டத்தையே அளித்து விடுகின்றான் அன்றோ!

இந்த சுக சாஸ்திராம்ருதத்தைக் குடிக்காத ஒருவனின் வாழ்க்கை வீணே! பாவியைப் போல் அவனது பிறவி வீணானதே! அவனது பிறவியால் அவன் தாய்க்கு வேதனை அளித்ததைத் தவிர வேறு எந்தப் பயனும் இல்லை.

> பகவான் வந்திருப்பதை நாம் உணரமுடியும். எப்பொழுது நம்மை அறியாமல் மேனிசிலிர்ப்பு, கண்களில் நீர், குரல் தழுதழுப்பு போன்றவைகள் ஏற்படுகின்றனவோ, அவையே அங்கு பகவான் வந்திருக்கிறான் என்பதற்கு அடையாளமாகும்.

"*துாலபைவ கதா லோகே ஸ்ரீமத் பாகவதோத்பவா*

*கோடிஜன்மஸமுத்தேன புண்யேனைவ துலப்யதே* (மா. 3-4)

ஸ்ரீமத்பாகவதக் கதை இந்த உலகத்தில் கிடைப்பதற்கு மிகவும் அரிதானது! துர்லபமானது! கோடி பிறவிகளில் செய்த புண்ணியங்களின் பலன் ஒரே சமயத்தில் உதிக்கும்பொழுதே ஒருவனுக்கு இது கிடைக்கின்றது. கலியில் மனதை அடக்குவதும், ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுவதும் முடியக்கூடியது இல்லை என்பதால், ஸ்ரீமத்பாகவதக் கதையின் ஸப்தாஹ சிரவணத்தை ஸ்ரீசுகர் கருணையினால் நமக்கு அளித்திருக்கிறார்.

மனதை அடக்குவதில் இயலாமை, வியாதி, ஆயுட்குறைவு போன்ற கலியின் பல தோஷங்களினால் இந்த ஸப்தாஹ சிரவணமானது விதிக்கப்பட்டு இருக்கின்றது.

*யத்பலம் நாஸ்தி தபஸா ந யோகேன ஸமாதினா*

*அனாயாஸேன தத்ஸர்வம் ஸப்தாஹஸ்ரவணே லபேத்* (மா. 3-50)

தவம், யோகம், சமாதி போன்றவைகளால் கூட அடைய முடியாத உயர்ந்த நிலையை எந்தவித சிரமமும் இல்லாமல் சப்தாஹ

சிரவணத்தின் மூலம் அடைந்துவிட முடியும்.

இந்த யுகத்தில் வரும் மனிதர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அசக்தர்களே. அவர்களுக்கு, "இதைச் செய்! அதைச் செய் என்று சொல்லாமல் கேள்! போதும்!" என்று சொல்ல ஒன்று வேண்டும். உடலில் உள்ள இந்திரியங்களில் காதுகளின் வழியாகக் கேட்பது மட்டும் தான் சுலபமானது. அதை விடச் சுலபமானது எதுவும் இல்லை! பகவானுக்கு எவ்வளவு கருணை இருந்தால் அப்படி ஒரு உபாயமான பாகவதத்தை நமக்கு அருளியிருப்பான்!

ஒரு திடப்பொருளுக்குக் கிலோ கணக்கில் எடை சொல்லாம், திரவத்திற்குக் கொள் அளவு சொல்லலாம், மின்சாரத்திற்கு Voltage கணக்கு சொல்லலாம், பகவானுடைய கிருபைக்கு என்ன அளவு சொல்லமுடியும்? அளவே இல்லாததுதான் கிருபை; அதுவும் பகவானுடைய கிருபை!



உலகம் முழுவதிலும் பாக்யசாலி யார்? அறிவாளியா? அழகு உடையவனா? தனம் படைத்தவனா, ஆயுள் உள்ளவனா? ஆரோக்கியம் உடையவனா? நல்ல மனைவி, மக்கள் உடையவனா? இவர்கள் யாரும் இல்லையாம்!

யாருடைய இதயத்தில் பகவானே தன்னைப் பிணைத்துக் கொண்டு வெளியே போக மாட்டேன் என்று அடம் பிடிக்கின்றானோ அவனே பாக்யசாலியாம். இதை பாகவத மாஹாத்மியம் கூறுகின்றது –

*ஸகல புவனமத்யே நிர்தனாஸ்தேபிதன்யா*
*நிவஸதி ஹ்ருதி யேஷாம் ஸ்ரீஹரேர்பக்திரேகா*
*ஹரிரபி நிஜலோகம் ஸர்வதாதோ விஹாய*
*ப்ரவிஸதி ஹ்ருதி தேஷாம் பக்திஸூத்ரோபனத்த:* (மா. 3-73)

யோகம், தியானம், கர்மாக்கள், வேதாந்தவிசாரம் செய்பவர்கள் எல்லோரும் இறைவனைத் தேடுகின்றார்கள். ஆனால், இறைவனோ பக்தனைத் தேடுகின்றான். நாமே அப்படித்தானே; நம் மீது அன்பு உள்ளவர்களைத்தானே நாமும் தேடுகின்றோம். அன்பிற்குத்தானே நாமும் ஏங்குகின்றோம்.

*உலகம் முழுவதிலும் பாக்யசாலி யார்? அறிவாளியா? அழகு உடையவனா? தனம் படைத்தவனா, ஆயுள் உள்ளவனா? ஆரோக்கியம் உடையவனா? நல்ல மனைவி, மக்கள் உடையவனா? இவர்கள் யாரும் இல்லையாம்!*

சுயநலமில்லாத, கபடமில்லாத, இறைவன் மீது ஏற்படக்கூடிய அன்பிற்குத்தான் பக்தி என்று பெயர். அந்த பக்தி துர்லபம். ஆனால், அந்த பக்திக்குத்தான் பகவான் சுலபன்.

நாமே நாமகீர்த்தனம், பூஜை, கதாசிரவணம் போன்று ஸத்ஸங்கமாக இருக்கின்றோம். அப்படி செய்யக்கூடிய ஸத்ஸங்கத்தில் பகவான் வந்திருக்கின்றானா இல்லையா என்பதை எப்படி அறிந்து கொள்வது? என்பது எல்லோருக்கும் இருக்கும் ஒரு கேள்வி. பகவான் வந்திருப்பதை நாம் உணரமுடியும். எப்பொழுது நம்மை அறியாமல் மேனிசிலிர்ப்பு, கண்களில் நீர், குரல் தழுதழுப்பு போன்றவைகள் ஏற்படுகின்றனவோ, அவையே அங்கு பகவான் வந்திருக்கிறான் என்பதற்கு அடையாளமாகும்.

உண்மையான பாகவதர்கள் கூடி, உலகத்திற்குப் புரியாத, அலௌகிகமான முறையில் ஸத்சங்கம் செய்யும்பொழுது, பகவான் அத்தகைய ஸத்சங்கத்திற்கு ஆசைப்பட்டு வைகுண்டத்தையே துறந்து வந்து விடுகின்றானாம். (கனியும்)

# ஆன்மீக சாதகர்களுக்கு... -ஸ்ரீஸ்வாமிஜி

| *தெய்வீக வாழ்வில் முன்னேற காரணங்கள்* | *முன்னேற்றம் ஏற்படாமல் ஆரம்ப நிலையில் இருக்க காரணங்கள்* |
|---|---|
| 1. பல மஹான்களை தரிசனம் செய்யலாம். ஆனால் தன் மனது ஈடுபடும் ஒருவரிடம் முழுமையாக தன்னை ஒப்புவித்து விட வேண்டும் | பல மஹான்களை தரிசனம் செய்து தனக்கு யார் குரு நிர்ணயம் இல்லாமல் தவிப்பது. |
| 2. சாதனைகளை (நாமஜபமோ, தியானமோ), ஒரு நாள் கூட விடாமல் பழகுதல் | சில நாட்கள் தீவிரமாக செய்தல், பிறகு பல நாட்கள் ஒன்றும் செய்யாமலிருத்தல், பிறகு செய்ய ஆரம்பித்தல் |
| 3. குரு உபதேசித்த மந்திரத்தை மட்டுமே ஜபம் செய்தல். ஒரு மூர்த்தியையே தியானம் செய்தல் | மாறி மாறி மந்திரங்களை ஜபம் செய்வது.<br>பல மூர்த்திகளை தியானம் செய்வது |
| 4. நன்மையோ தீமையோ எது ஏற்பட்டாலும் , இது கர்ம வினை என்று உணர்ந்து சாதனைகளை தொடர்ந்து செய்து வருதல் | ஏற்படும் சுக, துக்கங்களால் பாதிக்கப்படு சாதனைகளை அவ்வப்பொழுது கைவிட்டு விடுதல் |
| 5. தான் செல்லும் மார்க்கத்தில் ஒரு பிடிப்பும் அதில் ஒரு பெருமிதத்துடன் இருத்தல் | எல்லா மார்க்கத்தை போல் இதுவும் ஒரு வழி என்று அலட்சியமாக இருத்தல் |
| 6. தினமும் இரவு படுப்பதற்கு முன், நாம் அன்று நேரத்தை எவ்வாறு செலவழித்தோம் என்பதை குருவிடம் மானசீகமாக படித்து காட்ட வேண்டும் | நேரத்தை செலவழிப்பதை பற்றியெல்லாம் கவனிக்காமல் இருத்தல் |

| | |
|---|---|
| 7. மரணத்தை பற்றியும் உலகத்தின் நிலையாமை குறித்தும் அடிக்கடி சிந்தித்தல் | கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்தல் |
| 8. அடிக்கடி தன்னுடைய குருநாதரை தரிசனம் செய்தல். அவர் விதேக முக்தி அடைந்தவராக இருந்தால், சமாதியை தரிசனம் செய்தல் | குருநாதரை பல காலம் தரிசனம் செய்யாமல் இருப்பது ஆரம்ப கால சாதகர்களுக்கு ஒரு தொய்வை ஏற்படுத்தும். |
| 9. முடிந்த வரையில் எதிர்மறையாக சிந்திக்காமல் இருத்தல், புலம்பாமல் இருத்தல் | எப்பொழுதும் தாழ்வு மனப்பான்மையுடன் புலம்பி கொண்டே இருத்தல். இத்தகைய எண்ணங்கள் ஆழ்மனதில் பதிந்து மேலும் வலு பெற்று விடும் |
| 10. கம்பீரமாகவும், அதே சமயம் அடக்கத்துடனும் இருக்க வேண்டும் | சோர்ந்து இருத்தல் |
| 11. அவ்வப்பொழுது நாம் செய்து வரும் தெய்வீக சாதனைகள் தன்னுள் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை உற்று கவனிக்க வேண்டும் | அப்படி செய்யாமல் இருப்பது |
| 12. பொறுமையுடன் இருக்க வேண்டும். சாதனைகளில் நல்ல முன்னேற்றம் காண வெகு நாட்கள் பிடிக்கும் | பொறுமை இழத்தல். பிராணனின் சலனத்தினால் ஏற்படும் கனவுகளையும், காட்சிகளையும் தெய்வீக முன்னேற்றம் என்று நம்பி ஏமாறுதல். |

| | |
|---|---|
| 13. ஆன்மீக அனுபவங்களை குருநாதரிடம் தவிர தகுதியில்லாதவர்களிடம் சொல்லக்கூடாது | எல்லோரிடமும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை கூறிக்கொண்டு இருந்தால், சாதனையில் சறுக்கல் ஏற்படும். |
| 14. கொஞ்சம் கொஞ்சமாக உலகப்பற்று, ஆடம்பரம், அவசியமில்லாத காரியத்தில் ஈடுபடுதல் ஆகியவற்றை குறைத்துக்கொள்ளுதல் வேண்டும் | ஆரம்பத்தில் எப்படி இருந்தோமோ அப்படியே இருத்தல் |
| 15. அடிக்கடி உண்மையான சத்சங்கம் அவசியம். நல்ல நூல்களை படிப்பது, சேர்ந்து கீர்த்தனம் செய்வது, பகவத்குணங்களை கேட்பது மட்டும்தான் சத்சங்கம் | சத்சங்கம் அடிக்கடி செய்யாமல் இருந்தால் மனதில் அலுப்பு தட்டும் |
| 16. சாப்பிடுவதும் தூங்குவதும் அளவுடன் இருக்க வேண்டும். | சாப்பிடுவதும் தூங்குவதும்தான் சாது லக்ஷணம் என்று சோம்பேறியாக இருத்தல் |
| 17. அடிக்கடி தீர்த்த யாத்திரை அவசியமில்லை. அவ்வப்பொழுது செல்லலாம். | தீர்த்த யாத்திரை என்ற பெயரில் ஊர் சுற்றி கொண்டிருக்க கூடாது. |
| 18. தன் இஷ்ட தெய்வம் குடி கொண்டுள்ள க்ஷேத்ரத்தில் வாசம் செய்யலாம். | ஒரு மஹானை அண்டி இருக்க வேண்டும். அல்லது ஒரு க்ஷேத்ரத்தில் இருக்க வேண்டும். இவ்விரண்டுமில்லாது, நகர சூழ்நிலையில் வாழ்வது நல்லதல்ல. |

| | |
|---|---|
| 19. தனக்கு ஏற்படும் இடையூறுகளை எல்லாம் பிரார்த்தனையினால் மட்டுமே போக்கிக்கொள்ள வேண்டும் | பிரார்த்தனையின் மஹிமையை அறியாதிருத்தல் |
| 20. நம்பிக்கை! நம்பிக்கை! நம்பிக்கை! இதுதான் தெய்வீக வாழ்க்கையின் அஸ்திவாரம். | அவநம்பிக்கை! அவநம்பிக்கை! அவநம்பிக்கை! இதுதான் நரகத்தின் படிக்கட்டுகள். |




அட்டைப்படத்தில் ராஜஸ்தானை சேர்ந்த "பக்த மீரா". இவர் க்ருஷ்ணனின் அஷ்ட சகிகளுள் ஒருவரின் அவதாரம். இவரது விரிவான சரித்திரம் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திராவின் சார்பாக வெளியிடப்பட்டு இருக்கிறது. விவரங்களுக்கு: 91-44-24895875

கடவுளை ஏற்றுகொள்பவர்கள் கூட அவனை சக்தியுள்ளவனாக மட்டும்தான் பார்க்கின்றார்கள். அவனுடைய அழகு, அவனுடைய சிருஷ்டியில் உள்ள "அழகு, ஒழுங்கு, கணிதம், ரசாயனம், வினோதம், பல பல விதங்கள்" இவைகள் யாவற்றையும் கவனிக்க மறந்து விடுகின்றார்கள்.

-ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

## சனாதனப் புதிர் : பகுதி – 6

–ஆத்ரேயன் (விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)



1)அஸ்வத்தாமா - கொல்லப்பட்டான் - யானை - அஸ்வத்தாமா ஹத: குஞ்சர:

பகவான் கிருஷ்ணன் ஆலோசனையின் பேரில் பீமன் 'அஸ்வத்தாமா' என்ற யானையைக் கொன்று, அதை யுதிஷ்டிரர், துரோணர் முன்பாக கூறிய ஸ்லோகங்கள் துரோண பர்வாவில் காணப்படுகின்றன. தர்மத்திற்காகவே அவதாரம் எடுத்த கிருஷ்ணரும் - தர்மத்தின் உருவமாக வாழ்ந்த யுதிஷ்டிரரும் இதை செய்து இருப்பார்களா?

2)கர்ணன் துரியோதனுடன் சேர்ந்து அதர்மங்கள் / அக்கிரமங்களுக்கு துணை போனதால் அவன் தருமத்தைப் பற்றி பேச அருகதையற்றவன் என்பதை எங்கே ஶ்ரீ க்ருஷ்ணர் பட்டியலிட்டு காண்பிக்கிறார்?

3)ராதா என்ற பாத்திரம் எந்த புராணங்களில் காணப்படுகிறது? எந்த புராணங்களில் காணப்படவில்லை?

4)க்ஷீரபவானியின் (க்ஷீரபவானி) கோவில் எங்கே இருக்கிறது? இதன் விசேஷம் என்ன?

5)ப்ரஹ்மாண்ட புராணத்தில் உத்தரகாண்டத்தில் முக்கியமான பகுதி என்ன? இதன் விசேஷம் என்ன?

6)ஶ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருதம் என்ற நூலை இயற்றியவர் யார்?

7)வேத வ்யாஸர் தனது நான்கு சீடர்களான பைலர், வைஸம்பாயனர், ஜெய்மினி, சுமந்து இவர்களுக்கு எதை கற்பித்தார்?

8)அஷ்டாத்யாயி என்ற நூல் எதைப்பற்றியது?

9)மாஹிஷ்மதி நகரம் எங்கே இருக்கிறது? இதை ஆண்ட அரசர்கள் யார்?

10)மானஸ ஸரோவர் ஏரி எங்கே இருக்கிறது? இது எத்தனை அடி உயரத்தில் இருக்கிறது? ஏரியின் ஆழம் என்ன? சுற்றளவு என்ன?

***<u>சென்ற மாத நிகழ்ச்சிகள்</u>***

**ஜூலை 3** - ஆஷாட ஏகாதசி அன்று ருக்மிணி சத்யபாமா சமேத ஸ்ரீப்ரேமிக விட்டலனுக்கு ஸ்ரீஸ்வாமிஜி தமது திருக்கரங்களினால் திருமஞ்சனம் செய்வித்து பின்னர் பூஜை செய்தார்கள். விட்டலாபுர வீதிகளில் பின்னர் அபங்க பஜனை நடைபெற்றது. திரளான அன்பர்கள் பங்கேற்று குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**ஜூலை 19** அன்று பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள், விட்டலாபுரம் விஜயம் செய்து, ருக்மிணி சத்யபாமா சமேத ஸ்ரீப்ரேமிக விட்டலனை தரிசனம் செய்தார்கள். பின்னர், சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திராவை சேர்ந்த அன்பர்களால் அங்கு மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது. கூடியிருந்த அன்பர்கள் முன்னிலையில், ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்கள் . பிரவசனம் செய்து அருளாசிகள் வழங்கினார்கள்.

ஆஷாட ஏகாதசி ஜூலை3 மாலை அன்று திருமதி.கல்பனாஸ்ரீனிவாசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற நாமகீர்த்தனத்தில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார். இவ்விடத்தில் தொடர்ந்து ஒரு மண்டலத்திற்கு மாலை வேளையில் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்று வருகிறது. இம்மமஹாமந்திர கீர்த்தனையை ஸ்ரீஸ்வாமிஜியே துவங்கி வத்தார்.

**ஜூலை 4** - முடிச்சூர் விவேகானந்தாபள்ளி நிர்வாகத்தினர் அழைப்பிற்கிணங்க பள்ளி வளாகத்தில் நடைபெற்ற ஆசிரியர்கள் பயிற்சி முகாமில் பங்கேற்று ஸ்ரீஸ்வாமிஜி உரையாற்றினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை, சேவைக்கென்று தன் வாழ்வை அர்ப்பணித்துள்ள திரு.மீனாக்ஷிசுந்தரம் அவர்கள் மிகவும் நன்றாக செய்திருந்தார்.

**ஜூலை 5** அன்று மயிலாப்பூர் ராக சுதா ஹாலில் நடைபெற்ற வேதமந்திரங்களின் ஒலித்தட்டு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார். கூடியிருந்த அன்பர்கள் முன்னிலையில் வேதத்தின் உயர்வினை குறித்து சுமார் இரண்டு மணி நேரம் அருளுரையாற்றினார்.

பெரியகுளத்தில் புதிதாக 5-7-2009 அன்று நாமத்வார் துவங்கப்பட்டது. சென்னை நாமத்வாரை சேர்ந்த திரு.ராமச்சந்திரன், திரு. தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். நாம மகிமை மற்றும் குரு மகிமை குறித்து திரு.ராமச்சந்திரன் உரையாற்றினார். பிரதி தினம் இந்நாமத்வார்

காலை 8 முதல் 11 மணி வரையும் மாலை 5 முதல் 8 வரையும் திறந்திருக்கும். ஏகாதசி அன்று மட்டும் அகண்டமாக 12 மணி நேரம் கீர்த்தனம் செய்யப்படும். நாமத்வார் துவக்கவிழாவினன்று திரளாக அன்பர்களுடன் வீதி பஜனை ஹரே ராம மகா மந்திரத்துடன் செய்யப்பட்டது. பின்னர் அன்ன தானம் வழங்கப்பட்டது.


பெரியகுளம் 5-7-09

**ஜுலை 7** அன்று மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் விமரிசையாக குரு பூர்ணிமா கொண்டாடப்பட்டது. மாலையில் ஸ்வாமி ஸ்ரீசிவானந்தாவின் Divine Life Society மதுரை தலைவர் ஸ்ரீசிவானந்த சுந்தரானந்தா கலந்து கொண்டு மிக அருமையாக உரையாற்றினர்கள். பல பக்தர்கள் கலந்து கொண்டு குருவருள் பெற்று சென்றார்கள்.


ஆஷாட ஏகாதசி மாலை

**ஜுலை 16** அன்று நங்கநல்லூரில் விட்டல் பஜன் சமாஜ் சார்பில் திரு.பாலாஜி பாகவதர் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த அபங்க பஜன மேளாவில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்.

**ஜுலை 24, 25** தேதிகளில் தஞ்சாவூரில் மஹிளா மண்டலி துவங்கி இரண்டு வருடங்கள் முடிந்ததை ஒட்டி, மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனையும் ராதாகல்யாணமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கந்தசரஸ மஹாலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சுமார் ஆயிரம் அன்பர்கள் பங்கேற்றனர். ஸ்ரீஸ்வாமிஜி முதல் நாள் மஹாமந்திர கீர்த்தனத்தின் உயர்வையும், மறுநாள் ஆடிப்பூரமானபடியால், ஆண்டாள் கல்யாணம் குறித்தும் உபன்யாசம் நிகழ்த்தினார்கள். தஞ்சாவூர் மஹிளா மண்டலியினரால் நன்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சியில் 25ம் தேதி ஸ்ரீஸ்வாமிஜி மஹிளா மண்டலியை சேர்ந்த ஐம்பத்தி ஏழு பேரை கௌரவித்தார்கள்.


விட்டலாபுரம்

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



WITH COW "LAKSHMI" , MADHURAPURI - MAY 1995


# Guru

ram Consulting Private Limited

# பாலகர்களுக்கு ஒரு கதை



## ஆயுதம் கையிலிருப்பது ஆபத்து



வனத்தில் தனிமையில் ஒரு சன்யாசி கடுமையாக தவம் செய்து கொண்டிருந்தார். இந்திர பதவி என்பது ஒரு பதவி. அந்த பதவியில் இருக்கும் இந்திரனுக்கோ யாராவது தவம் செய்தால் பயம் ஏற்பட்டு விடும். ஏன் என்றால், தவ வலிமையினால், தன்னுடைய இந்திர பதவிக்கு போட்டியாக வந்து விடுவார்களோ என்று பயம். அதனால் யாராவது ரம்பை , மேனகை, ஊர்வசிகளை அனுப்பி அவர்களுடைய தவத்தை கெடுத்து விடுவான். இவருடைய தவத்தை எப்படி கலைக்கலாம் என்று புதுவிதமாக சிந்திக்கலானான். இந்திரன் மனித உருவத்தில் வந்து அவரிடம் ஒரு கத்தியை கொடுத்தான். சிறிது காலம் இந்த கத்தி தங்களிடம் இருக்கட்டும் , பிறகு வந்து வாங்கிக்கொள்கிறேன் என்று கூறி விட்டு சென்று விட்டான்.

அந்த சன்யாசி, இப்பொழுது இந்திரன் தன்னிடம் விட்டு சென்ற கத்தியையே பத்திரமாக பார்த்துக்கொள்ள ஆரம்பித்தார். கொஞ்ச நாள் கழித்து பார்த்தார். மழை, வெய்யில் இவைகளினால் தாம் பாதிக்கப்படுவதை பார்த்தார். கையில் இருக்கும் கத்தியை கொண்டு பக்கத்தில் இருக்கும் மட்டையையெல்லாம் வெட்டி ஒரு குடிசையை போட்டுக்கொண்டார். சிறிது காலம் கழித்து, குடிசையில் கரையான் கூட்டையெல்லாம் கத்தியால் தட்டினார். பிறகு,

*நம்முடைய சர்வ இந்திரியங்களையும் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ள வேண்டும். விளையாட்டாக கூட ஆயுதங்களை கையில் வைத்துக்கொள்ள கூடாது. ஏன் என்றால் விளையாட்டு விபரீதமாகி விடும்.*

குடிசையை சுற்றி உள்ள எல்லா புதர்களையும் கத்தியால் வெட்டி சரிப்படுத்த ஆரம்பித்தார். கொஞ்சம் கொஞ்சமாக, தன் ஆஸ்ரமத்தை சுற்றி வந்த மிருகங்களை எல்லாம் கத்தியை காட்டி மிரட்ட ஆரம்பித்தார். கொஞ்சம் கொஞ்சமாக, சின்ன சின்ன மிருகங்களை எல்லாம் கத்தியால் குத்த ஆரம்பித்தார்.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அந்த பக்கம் வந்த வழிப்போக்கர்களை எல்லாம் தாக்க ஆரம்பித்தார். இதனால் அவருடைய தவமும் குறைந்தது. தவம் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவரை விட்டு போயிற்று. இந்திரனும் நிம்மதி அடைந்தான்.

நம்முடைய சர்வ இந்திரியங்களையும் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ள வேண்டும். விளையாட்டாக கூட ஆயுதங்களை கையில் வைத்துக்கொள்ள கூடாது. ஏன் என்றால் விளையாட்டு விபரீதமாகி விடும்.

## சனாதனப் புதிர் - பகுதி - 5 விடைகள்

**1)**10–85–1028–10552; **2)**ரிக் வேதத்தில்; **3)**கபில முனிவரின் புதல்வர். அஸ்வ சாஸ்திரம் – குதிரைகளைப் பற்றிய நூல்; **4)**பாகவதம் – 7.11.2, மத்ஸய புராணம் – 143.30–32, ; ப்ரஹ்மாண்ட புராணம் – 2.33.37.38; **5)**சுபாகு – சத்ருகாதி, மதுரா – வைதீஷா; **6)**சர்தார் வல்லபாய் படேல் – துணைப்பிரதமர் – 11.5.1951 – ராஜேந்திர பிரஸாத் ஜனாதிபதி திறந்து வைத்தார்; **7)**வேதாந்த தேசிகர்; தியாகராஜர்.

**8)**உஸூநரன் – சந்திரவம்சத்து அரசன் – போஜ தேசத்தை ஆண்டு வந்தான். மனைவி மாதவி – யயாதியின் பெண். **9)**மஹாபாரதம் – உத்யோக பர்வா – அத்தியாயங்கள் 33 முதல் 40 வரை. 588 ஸ்லோகங்கள். விதுரன் திருதராஷ்ட்ரனுக்குச் சொல்லுகிறார். **10)**கௌடில்யர் – என்கிற விஷ்ணுகுப்த சாணக்கியர் – சந்திரகுப்த மௌரியர்; ஸமர்த்த ராமதாஸ் – சிவாஜி; வித்யாரண்யர் – ஹக்கா / புக்கா / விஜயநகர சாம்ராஜ்யம்; இவர்கள் அரசர்களுக்கு ஆலோசனை அளித்து பக்க பலமாக இருந்தார்கள். **11)**ஒருவருக்கு சன்யாச தீக்ஷை கொடுப்பதற்கு முன்பாக செய்யப்படும் – மஹா நாராயண உபநிஷத் – பகுதிகள் 65–66.

# பிரம்மம் ஏகம் – கீதைகள் அநேகம்–5

–ஆத்ரேயன் (சென்ற இதழ் தொடர்ச்சி)

உத்தர கீதையில் 2, ஹம்ஸ கீதையில் 2, யமகீதையில் 3 இருப்பதால், மொத்தம் 42 கீதைகள் மேற்கூறியபடி இருப்பதாகத் தெரிகிறது. 16 கீதைகள் மஹாபாரதத்திலும், 20 கீதைகள் புராணங்களிலும் 4 கீதைகள் மற்றவர் இயற்றியது ஆக 40 கீதைகள் இருப்பதாக பண்டிதர் ஒருவர் தெரிவிக்கிறார். கீதா கோவிந்தம், ரமண கீதை இவைகளைச் சேர்த்தால் 42 கீதைகள் இருக்கின்றன.

(32) வாமதேவ கீதை : வாமதேவ முனிவருக்கும் வஸுமனஸ் என்ற அரசனுக்கும் இடையே நடந்த உரையாடல். இதை பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் சொல்லுகிறார். அரசனது கடமைகளைப் பற்றியது. இது மஹா பாரதம் - சாந்தி பர்வா - அத்தியாயங்கள் - 92-94 இவைகளில் காணப்படுகிறது.

(38) வ்ரத கீதை : இது சனக முனிவர் வ்ரதன் என்ற அரசனுக்கு அளித்த உபதேசம். இது மஹா பாரதம் - சாந்தி பர்வா - அத்தியாயங்கள் - 290 - 291 இவைகளில் காணப்படுகிறது. 104 ஸ்லோகங்கள் கொண்டவை.

(43) ருத்ர கீதை : இது பாகவத மஹாபுராணத்தில் காணப்படுகிறது. (4.24.33-79) பிராசீனபர்ஹி என்ற அரசனுக்கு பிரசேதஸ் என்ற 10 பிள்ளைகள். அரசன் தனது மகன்களை நல்ல ஒழுக்கமுள்ள பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறான். பிரசேதஸ் என்ற 10 பிள்ளைகள் ருத்ரனை வேண்ட அவர் பகவானான வாஸுதேவனை பிரார்த்திக்குமாறு சொல்கிறார். எப்படி வாஸுதேவனை துதிக்க வேண்டும் என்று 47 ஸ்லோகங்கள் மூலமாக அருளுகிறார். இதை ருத்ர கீதை என்று கூறுகிறார்கள்.

(44) கோபிகா கீதம் : இது பாகவத மஹாபுராணத்தில் 10வது ஸ்கந்தத்தில் 31-வது அத்தியாயத்தில் காணப்படும் முதல் 19 ஸ்லோகங்கள். இவைகள் வேதாந்தத்தின் சாரங்கள். முக்கியமாக ஸ்லோகம் 4,9 மேலும் 18 இவைகளைப் படித்து புரிந்துக் கொள்ளலாம். பரீக்ஷித் ராஜாவின் சந்தேகங்களை சுகப்பிரம்மம் (10-33-27-40) மூலமாக தெளிவு படுத்தி விளக்குகிறார்.

(45) சௌவ உத்கீதா :இது சாந்தோக்ய உபநிஷத்தில் காணப்படுகிறது. (1-12) மைத்ரேயர் என்ற முனிவர் தனது வேத அத்யயனத்திற்கு தகுந்த இடம் ஒன்றை தேடிக்கொண்டு இருக்கையில் அவரது முன்பாக ஒரு அழகிய வெள்ளை நாய் தோன்றுகிறது. உடனே பல நாய்கள் தோன்றி வெள்ளை நாயைப் பார்த்து உணவு அளித்திட வேண்டுகின்றன. ஒரு நாய் இன்னொரு நாயின் வாலைப்பிடித்துக் கொண்டு நாய்ச் சங்கிலியாக உத்கீதையைப் பாடுகிறது. இது சூரியனைப் பார்த்து உணவு அளிக்கும்படி வேண்டகிறது. சோமயாகத்தில் ரித்விக்குகள் பஹிஷ்பவமான மந்திரங்களைச் சொல்வதை இந்த நாய்கள் செய்தன. இதை ஓதுவதால் நிறைய அன்னம் கிடைக்கும். சாம வேதத்தில் காணப்படுகிறது.

(46) வ்யத கீதை : கசாப்பு கடைக்காரன் கொக்கு காகம் - இவைகளை எரித்த முனிவருக்கு செய்யும் உபதேசம். வேதாந்தத்தின் சாரம்.

இன்னும் பல கீதைகள் இருக்கின்றன. இதை புரிந்து கொண்டு நடைமுறையில் கொண்டு வருவதை விட கலியுகத்திற்கு கடவுளின் பெயரைச் சொல்லும் பக்தி மார்க்கமே சிறந்தது. நமது வியாதிக்கு 'ஹரே க்ருஷ்ணா' நாமமே மருந்தாகும். பிரதானதானதும் முக்யமானதுமான பகவத்கீதையையே நாம் படிப்பதில்லை. பகவத் கீதையைப் போல பல கீதைகள் இருக்கின்றன. அவைகளைப் படித்து தெரிந்துக் கொள்ள நம் போன்ற சம்சாரிகளுக்கு பல பிறவிகள் கிடைத்தாலும் படித்து புரிந்து கொள்ள மாட்டோம். தொலைக்காட்சிகள், திரைப்படங்கள், நாடகங்கள், கூத்து, கேளிக்கைகள், இருக்கும்பொழுது இந்த கீதைகளைப் பற்றி தெரிந்துக் கொள்ளவோ அல்லது படிக்கவோ நமக்கு "நேரம்" கிடைப்பதில்லை. இந்த கிடைத்தற்கரிய மனிதப்பிறவியில் நாம் எதையும் படித்து தெரிந்து கொண்டு முக்தி நிலைக்கு முயற்சி செய்யவில்லை என்ற வருத்தம் மனதில் ஒரு ஓரத்தில் ஒட்டிக் கொண்டு இருந்தாலே போதும்; நாம் செய்யும் தவறுக்கு எல்லாம் பிராயச்சித்தம்; "ஹரே ராம! ஹரே க்ருஷ்ண" என்ற மஹா மந்த்ரம் - எல்லாம் க்ருஷ்ணார்ப்பணம் என்று அறிந்துக் கொண்டாலே போதும்.

(முற்றும்)

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

(சென்ற இதழ் தொடர்ச்சி)


அஸ்வனிகுமார் இப்பொழுது ஸ்வயமாக ஒரு தொழிலை ஆரம்பித்தார். கடினமாக உழைத்து நிறைய சம்பாதித்தார். ஆனால் இந்தக் காலங்களிலும் அவர் பஜனையை தொடர்ந்து செய்து வந்தார். அதே உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பஜனையில் ஈடுபட்டார். இரவு ஒன்பது மணிக்கு படுக்கச் செல்வார். இரவு ஒரு மணிக்கு எழுந்து பஜனை செய்ய அமர்வார். இதன் பின் காலை ஐந்து மணிக்கு கங்கையில் ஸ்னானம் செய்ய செல்வார். பிறகு தனது பூஜை, பாராயணம், ஜபம், கீர்த்தனம் ஆகியவற்றை முறையே செய்வார். பிறகு தனது ஆகாரத்தை தானே செய்து கொள்வார். ஏனெனில், பிறர் சமைத்ததை உண்டால் தனது பஜனம் பாதிக்கப்படும என்று அவர் நம்பினார். அவரது மனைவி மற்றும் குழந்தைகள் அவருக்கு மிக்க உறுதுணையாக இருந்து, அவர் பஜனை பாதிக்கப்படாமல் இருக்கும்படி உதவினர். இவ்வாறு அவரது நாட்கள் ஆனந்தமாக கடந்தன.

இவ்வாறு இருந்தபோதிலும், அவருக்கு மனதில் ஒரு வேதனை இருந்து கொண்டேயிருந்தது. அவர் ப்ருந்தாவனம் சென்றிருந்தபொழுது, கௌர்-நிதாய் மற்றும் ராதா-கோவிந்தரின் இரு புகைப்படங்களை அவர் பார்த்திருந்தார். அந்த புகைப்படங்கள் அவர் மனதை கொள்ளை கொண்டன. அந்த படங்களை மிகவும் பாடுபட்டபோதிலும் அவரால் பெற முடியவில்லை. பல இரவுகள், அந்த படங்களை பெற இயலாததை நினைத்து விரஹத்தில் அவருக்கு உறக்கமே வராது. ஒரு இரவு மிகவும் அழுது, அவர் நிதாயியிடம் "நிதாய், பதிதர்களை காப்பாற்றும் கருணைக்கடல் நீ என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்! நான் ராதா-கோவிந்தன் மற்றும் கௌர்-நிதாயியினுடைய தர்ஸனத்தை படத்தில் பெறுவதற்குக் கூட தகுதியற்றவனாக உள்ளேனா!" என்று கதறினார். அன்று

இரவே அவர் ஓர் கனவு கண்டார். அதில் கல்கத்தாவின் சித்புரா ரோடில் உள்ள ஒரு கடையிலிருந்து அந்த படங்களை பெறுவது போல் ஒரு காட்சியை கண்டார்.



மறுநாள் காலையில் அவர் சித்புரா ரோட் சென்றபொழுது, அங்கு கனவில் பார்த்த கடை அப்படியே இருப்பதைக் கண்டு அதிசயித்தார். அங்கு நுழைந்தவுடன் அவருக்கு அந்த கௌர்-நிதாயி படம் கிடைத்துவிட்டது. அதைக் கண்டு அவர் ஆனந்தம் அடைந்தார். ஆனால் அந்த ராதா-கோவிந்தன் படம் மட்டும் எவ்வளவோ தேடியும்



கிடைக்கவில்லை. அப்பொழுது அஸ்வனிகுமாரின் பார்வை ஒரு அலமாரியின் மேல் பட்டது. கடைக்காரரிடம் அந்த அலமாரியில் அந்த படம் இருக்கின்றதா என்று பார்க்கும்படி வேண்டினார். கடைக்காரனோ 'அந்த அலமாரியில் மற்ற பல பொருட்கள் இருக்கின்றன. ஆனால் படங்கள் ஏதும் அங்கு வைப்பதில்லை" என்று கூறினான்.

அஸ்வனிகுமாருடைய ஹ்ருதயம் உடைந்துவிட்டதைப்

போல் உணர்ந்தார். அவர் கண்களிலிருநது நீர் பெருகிற்று. அப்பொழுது ஏதோ நினைவு வந்தவனைப் போல் அந்த கடைக்காரன் ஒரு பெரிய பையை எடுத்தான். சில நாட்களுக்கு முன்பு ப்ருந்தாவனத்திலிருந்து, நிறைய படங்கள் கொண்ட ஒரு பெரிய பார்ஸலை பெற்றிருந்தது, அவனுக்கு அப்பொழுதுதான் நினைவு வந்தது. அதில் தேடினார். ஆஹா! அஸ்வனிகுமார் தேடிக் கொண்டிருந்த, அதே ராதா-கோவிந்தனின் படம் அதில் இருந்தது. அவருடைய ஆனந்தத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

அவரை பொறுத்தவரையிலும் அப்படங்கள் வெறும் படங்களல்ல. ஸாக்ஷாத் கௌர்-நிதாய் மற்றும் ராதா-கோவிந்தனே தன்னிடம் வந்து விட்டார்கள் என்றே எண்ணினார் அவர்.

........ தொடரும்

**HUMBLE PRANAMS AT THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

**EUROWORLD TRAVEL PVT LTD**
**1ST FLOOR, 26 (old 82) C.P RAMASWAMY ROAD**
**ALWARPET, CHENNAI - 600018**
**PH:24671228/1229,24661228/1229**
**EMAIL:eurotravel@vsnl.net,euroworldtravel@gmail.com**

# மாலே மணிவண்ணா – 75

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

திருமாலை வழிபடும் நற்றிணைக் கடவுள் வாழ்த்து “மாநிலம் சேவடி யாக” என்று பெருமானுக்கு இந்த உலகமே திருவடியாக இருக்கிறது என்று கூறுகிறது. உலகில் உள்ள நமக்கு உலகமே பெருமான் திருவடி என்றால் பற்றுதல் எளிதல்லவா?

பாரதப் போரில் தூது செல்ல உடன்படுகிறார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. பாண்டவர்களில் இளையவனாகிய சகாதேவனை அழைத்து பாரத யுத்தம் வராமல் இருக்க வழி கேட்கிறார். அப்பொழுது சகாதேவன், கர்ணனை அரசன் ஆக்க வேண்டும்; அருச்சுனனைக் கொன்று விட வேண்டும், திரௌபதியின் கூந்தலைக் களைந்து விட வேண்டும், ஸ்ரீகிருஷ்ணனாகிய உன்னைக் கட்டிப் போட்டுவிட வேண்டும் – இதுவே பாரத யுத்தம் நிகழாமல் இருக்க வழி என்கிறான்.

> *எம்பெருமானைச் சகஸ்ர நாமங்களால் துதிக்குமாறு போலவே எம்பெருமானது திருவடி நிலைகளைச் சகஸ்ர சுலோகங்களால் துதித்தார் ஸ்ரீ வேதாந்த தேசிகர் என்றால் திருவடி நிலைகளின் பெருமை சொல்லுதற்கரியது அல்லவா?*

ஸ்ரீ கிருஷ்ணர் சொல்கிறார் "முன்னால் நீ கூறிய எல்லாச் செயல்களையும் நிறைவேற்றினாலும் என்னைக் கட்டிப் போடுவதாகச் சொன்னாயே, அது எவ்வாறு உன்னால் முடியும்?" என்று கேட்கிறார்.

"உன் உருவம் தன்னை நீ காட்டினால் நான் கட்டி விடுவேன்" என்கிறான் சகாதேவன்.

பெருமான் ஆய வடிவு பல ஆயிரம் கொண்டு சகாதேவன் மனம் அறிவானாய்க், கட்டுக என்று கூறுகிறான். தூயவனாகிய சகாதேவனோ எல்லா வடிவங்களுக்கும் மூல வடிவத்தைத் தன்

உள்ளத்தன்பினால் பற்றி எல்லா உலகிலும் பரந்து விரிந்த அப்பெருமானது திருவடிகளைத் தன் கருத்தினாற் கட்டிப் போட்டு விட்டானாம். அப்பொழுது

"*அன்பால் என்தன்னை அறிந்தே பிணித்தமை நன்று*

*என்பாதம் தன்னை இனி விடுக*" என்று சகாதேவனிடம் தன் திருவடிக்கட்டை அவிழ்த்து விடக் கெஞ்சுகிறானாம் பகவான்.

திருவுருவைக் காட்டிலும் திருவடியைப் பிடித்துக் கொள்ளுதல் எளிது. மணிவாசகர் திருக்கோவையாரில்

"தன் ஈரடிக்கு என் இரண்டு கரங்கள் வைத்தான்" என்று சொல்லியதும் இக்கருத்தே பற்றியது. அவனுக்கு இரண்டு திருவடி; நமக்கு இரண்டு கைகள்; ஆக இறுகப் பற்றிக் கொள்ள முடியும். சிக்கெனப் பிடிக்க முடியும் அல்லவா?

"*மந்த்ர மூலம் குரோர் வாக்கியம்*

*தியான மூலம் குரோர் ரூபம்*

*பூஜா மூலம் குரோர் பாதம்*

*வித்யா மூலம் குரோர் பக்தி*"

என நாம் பூசிப்பதற்கும் ஆசார்யன் திருவடியே உகந்தது என்பதும் சொல்லப் பெறுவது காண்க.

எம்பெருமானைச் சகஸ்ர நாமங்களால் துதிக்குமாறு போலவே, எம்பெருமானது திருவடி நிலைகளைச் சகஸ்ர சுலோகங்களால் துதித்தார் ஸ்ரீ வேதாந்த தேசிகர் என்றால் திருவடி நிலைகளின் பெருமை சொல்லுதற்கரியது அல்லவா?

பரதாழ்வாரால் கொண்டு செல்லப் பெற்று, அயோத்தியின் நந்திக்கிராமத்தில் எம்பெருமானுக்கு நிகராகப் பதினான்கு ஆண்டுகள் அரசு வீற்றிருந்த பெருமை திருவடி நிலையாகிய பாதுகைக்குரியது என்றால், திருவடியின் பெருமை திருமாலின் பெருமைபோல அளப்பரியது என்றாகும்.

"*நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்*

*செந்தனிக் கோல்முறை செலுத்த*" என்பார் கம்பர்.

*"செம்மையின் திருவடித்தலம் தந்து ஈகென, எம்மையும் தருவன இரண்டும் நல்கினான்"* என்று திருவடி இருந்த இடமாகிய திருவடித்தலம் இம்மை, மறுமை இரண்டும் அன்றி எம்மையும், எப்பிறவியிலும் எல்லா இன்பங்களையும் தருவன என்பதைக் கவிச்சக்கரவர்த்தியின் வாக்கால் அறிந்து அனுபவிக்கலாம்.

திருவடி சூட்டு படலம், திருவடி தொழுத படலம் என்றும் எம்பெருமானைச் சொல்கிற இடம் எல்லாம் திருவடி தொட்டே பகவானைக் காட்டுகிற கவிகளின் நோக்கம், பகவானை அடைவதற்குத் திருவடிகளே உபாயம் என்பதும், திருவடிகளையே உபாயமாகக் கொண்டு அடையப்படும் உபேயமும் அத்திருவடிகளே ஆகும் என்பதே ஆகும். உபாய உபேயங்கள் ஒன்றானால் பெறுவானுக்குப் பேறு நிச்சயம் ஆகும்.

வனவாசத்தில் இராமபிரான் நடந்து செல்கிறபோது வழியில் ஒரு புல்லாகவோ கல்லாகவோ கிடந்திருந்தால் அவன் திருவடிபட்டு வீடு பேறு கிட்டியிருக்குமே!; அவ்வாறு அப்போது கல்லும் புல்லுமாகப் பிறக்காமல், பலபிறவிகளை எடுத்துத் துன்பப்படுகிறோமே என்று அழகிய மணவாளதாசர் திருவரங்கக் கலம்பகத்தில் கூறுவதும் திருவடிச் சிறப்பை மேலும் விளக்கும் அப்பாடல்,

*புலை ஆம் பிறவி பிறந்து என் செய்தோம்! பொன்னி பொன் கொழிக்கும்*
*அலை ஆர் திரு அரங்கத்து எம்பிரான் நமது அன்னையொடும்*
*தொலையாத கானம் நடந்த அந்நாள், தடம்தோறும் புல்ஆய்,*
*சிலை ஆய் கிடந்திலமே, நெஞ்சமே! கழல் தீண்டுகைக்கே*

(திருவரங்கக் கலம்பகம் 16)

நின்னைக் காட்டிலும் சிறந்தவை நின் திருவடி இணைகள் என்று துதித்தவர். அடுத்து, உன்னிடத்தில் சிறந்து நிறைந்த தெய்வத்தன்மையை உடையாய் என்று தோத்திரம் செய்கிறார். தொடர்ந்து காண்போம்.

(தொடரும்)

***அக்ஷரமணமாலை*** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-160)

பெயர் நினைத்திடவே பிடித்திழுத்தனையுன்
பெருமை யாரறிவார் அருணாசலா

அருணாசலத்தை நினைத்தாலே முக்தி கிடைக்குமாம். திருவண்ணாமலை செல்ல வேண்டும் என்று நினைத்தாலும் போதுமாம் - அம்மலையே அப்படி நினைப்போரை இழுத்து தரிசனம் தருமாம். (பிற க்ஷேத்ரங்களுக்கு செல்ல நினைத்தாலும் செல்ல இயலாது போக நேரிடலாம்). அது மட்டுமல்ல; ஞானியராக இருந்தால் தன்னுள் இழுத்துக்கொண்டு விடவே விடாதாம். இதை பல ஞானியரின் சரித்திரத்தில் பார்க்க முடியும்.

மலை மேல் குகை நமச்சிவாயம் என்றொரு ஞானி வாழ்ந்து வந்தார். இவர் எப்பேர்ப்பட்டவரென்றால், ஒருமுறை கர்ப்பிணியாக இறந்த ஆட்டை குட்டிகளுடன் உயிர்ப்பித்தார். சிலர் இவரை சோதிப்பதற்காக, உயிருடனிருப்பவனை பாடையில் கட்டி "இவன் உயிரற்றவனா இல்லையா" என கேட்டனர். அவரோ "செத்தவன் செத்தவனே" என, அவன் மரித்தே விட்டான். இவரது சீடர்களான குரு நமச்சிவாயம், விருபாக்ஷி முனிவர் இருவருமே பெரிய மஹான்கள். குரு நமச்சிவாயம் சிதம்பரம் கோவில் கும்பாபிஷேகம் செய்தவர். இவருக்கு உண்ணாமுலை அம்மன் பன்முறை தரிசனம் தந்து அமுது செய்வித்திருக்கிறாள். விரூபாக்ஷி முனிவரின் சமாதியாக மலை மேல் விபூதியால் ஆன லிங்கம் உள்ளது. குகை நமச்சிவாயம் ஆந்திர மாநிலம் மல்லிகார்ஜுனத்தை சேர்ந்தவர். அண்ணாமலை தரிசனம் செய்ய வந்தவர் வழியில், பூந்தமல்லியில், பல அற்புதங்களை நிகழ்த்தியதாக சொல்லப்படுகிறது. அவர் திருவண்ணாமலை வந்த பிறகு வெளியில் செல்லவில்லை. இது தவிர சமீபத்தில் வாழ்ந்த ஈசான்ய மட தேசிகர், பவழக்குன்று ஸ்வாமிகள், சேஷாத்திரி ஸ்வாமிகள், யோகிராம்சுரத்குமார், ரமண மஹரிஷிகள் ஆகியோர் மிக பெரிய மஹான்கள். அவர்களெல்லாம் திருவண்ணாமலை வந்த பிறகு வெளியில் செல்லவேயில்லை.(இதன் காரணமாகவே) மாணிக்கவாசகர் அடி அண்ணாமலை வந்து, பாடி விட்டு, ஊரினுள் வராமலேயே சென்று விட்டார். ஆக இத்தனை மஹான்கள் சமீப காலத்திலேயே என்றால், இதுகாறும் யுக யுகங்களில் எவ்வளவு

மஹான்கள் இருந்திருப்பர். இதன் மகிமையை என்னவென்று சொல்வது?

கைலாய மலை என்பது பரமேஸ்வரனின் வீடு போலவாம். இம்மலையையோ அவன் "தான்" என பாவிக்கிறானாம். இந்த மலைக்கு பூஜை செய்ய முடியாதே என்பதனால்தான் அதற்கு பிரதியாக கோவில் உள்ளது. பார்வையை உள்புறமாக திருப்பி ஆன்மவிசாரம் செய்ய இயலாதவர்கள், இம்மலையை பிரதக்ஷிணம் செய்து வந்தால் போதுமாம். அதுவே முக்தி அளித்து விடுமாம்.

இந்த அண்ணாமலையின் பெயர் நினைத்தாலே, பிடித்து இழுக்கும் என்பது ரமணரின் சரித்திரத்திலிருந்தும் தெளிவாக தெரிகிறது. சிறு வயதிலிருந்தே அவர் அருணாசல ஸ்மரணம் கொண்டிருந்தவர். (அகம்புகுந்து ஈர்த்து எனும் பாடலையும் இங்கு ஒப்புதல் சரியாகும்.)

பெயர் நினைத்தாலே அணையும் அருணாசலா!, "உன் பெருமையை யார் முழுமையாக அறிவார்?" (முழுமையாக அறிந்தவர் யாருமில்லை என பொருள்) என்கிறார் ரமண மஹரிஷிகள். (தொடரும்)

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

ஆகஸ்டு 2 பாண்டிச்சேரி வைதீகஸ்ரீ நிகழ்ச்சி

ஆகஸ்டு 3 அம்பத்தூர் பாலவிட்டல் மந்திர்பஜன் மண்டலி துவக்கம் மாலை 3மணி

ஆகஸ்டு 1, 16, 31 ஏகாதசி

ஆகஸ்டு 13-22 க்ருஷ்ண ஜன்மாஷ்டமி (பத்திரிக்கை பார்க்க - பின்பக்கம்)

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.